மலர் : 20
இதழ் : 6

# அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

குழித்துறை மறைமாவட்டம்

ஜீன் 2025

தனிச்சுற்றுக்கு மட்டும்



## உளி தேடும் சிற்பங்கள்.....

# இயக்குநரிடமிருந்து

இறை இயேசுவில் அன்பானவர்களே "உளி தேடும் சிற்பம்" என்னும் சிந்தனையில் இந்த மாதத்திற்கான அன்பிய இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வறண்ட நிலம் பண்பட்டு வயல்வெளியானது போல, பாறைகள் உடைபட்டு படிகற்கள் ஆனது போல, பூமி பிணவுண்டு நீரூற்றைக் கண்டது போல, கடினமான மனங்கள் இறைவனின் வார்த்தை என்னும் உளியால் மென்மையாயிற்று. சிற்பம் என்பது முப்பரிமாணக் கலைப்பொருள். அது பிறர் கண்ணுக்கு கலையானது, சிற்பியின் கண்ணுக்கு அவன் வடிவமைத்த உருவம் செம்மையானது. சிலையைச் செதுக்கும் சிற்பியின் எண்ணத்தைப் பொறுத்தே உளியில் ஆற்றலும், சிற்பத்தின் வடிவமைப்பும் வெளிப்படும். எண்ணமது நன்றானால் வாழ்க்கை நன்றாகும்.

வார்த்தை உயிருள்ளது, காயங்களுக்கு குணமளிக்கும் மருந்தானது. விவிலியத்தில் உடன்படிக்கையின் வார்த்தைகளான பத்துக் கட்டளைகள் மனித மனங்களை செம்மைப்படுத்தும் ஆயுதமாயிற்று. வலுவிழந்த மனிதருக்கு உயிரூட்டமளிப்பது ஆறுதலான வார்த்தைகள். நம்மைச் சார்ந்து வாழும் உறவுகளின் காயப்பட்ட மனதை ஆற்றுப்படுத்தும் வார்த்தைகளால், அவர்களின் வாழ்க்கையைச் செதுக்குவோம். கண்ணால் காண்பதையும், கற்பனையில் தெளிந்தவற்றிற்கும் உருவம் கொடுத்து உயிரூட்டமளிக்கும் சிற்பியைப் போல, நம் கண்முன் வாழ்ந்து போதையின் பாதையில் சிதைந்துக் கொண்டிருக்கும் மனிதருக்கு வாழ்வளிக்கும் வார்த்தைகளால், சீரானப் பாதையைக் காட்டி சிற்பிகளாவோம்.

வாழ்க்கை என்பது ஓவியமல்ல; மாற்றி மாற்றி வரைவதற்கு, அது செதுக்கப்பட்ட சிற்பம். இறைவனால் செதுக்கப்பட்ட சிற்பத்தை இவ்வுலக சான்றோரின் சிந்தனையாலும், அறிவாற்றலாலும், மெருகூட்டித்தான் ஆக வேண்டும். இறைவனின் பாதையில் பின்பற்றி வாழும் நாம் நேர்மையான எண்ணங்களாலும், கூரிய சிந்தனைகளாலும் கடினமான இதயத்தை உடைத்து அன்பு, பண்பு, நீதி, சமத்துவம், விடாமுயற்சி போன்ற அழகிய குணங்களால் மெருகூட்டிக் கொள்வோம்.

நேர்மையானப் பாதைகள் கடப்பது சாதனையல்ல, கரடுமுரடான பாதைகளை சமன்படுத்தி கடப்பது தான் சாதனை. அது போல் நம் குடும்பங்களில், பங்கில் மனித நேயத்தை விதைக்கும் பணியில் முழுமுயற்சியுடன் ஈடுபடுவோம். நிறை குறைகளை சரிசமமாக ஏற்றுக் கொள்வோம். குறைகள் என்பது நமக்கான வீழ்ச்சியல்ல. மாறாக நம்மை நாமே செதுக்கிக் கொள்ள ஓர் வாய்ப்பு என்பதை உணர்ந்தவர்களாக செயல்படுவோம். பயணிக்கும் பாதைகள் சீராகட்டும், உறவுகள் செழித்தோங்கட்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

பணி தோழமையில்

அருட்பணி. M. **ஆல்வின் விஜய்**
இயக்குநர், அன்பிய பணிக்குழு

முதல் வாரம்

# பள்ளிக்கு செல்லலாம் வாங்க: மாணவர்

திரு. V. **ஜெகதீஸ் பிரபு**,
அன்பிய ஒருங்கிணையம், ஆரோக்கியபுரம்.

பள்ளி என்பது மாணவ மாணவிகளின் இரண்டாவது வீடு எனலாம். பள்ளி என்பது கல்வியின் ஆலயம். மனித வாழ்க்கையில் கல்விக்கு மிக முக்கியமான இடம் உண்டு. நம் அறிவை வளர்க்கும் இடம்தான் பள்ளி. அங்கு நாம் படிப்பது மட்டுமல்லாமல் நல்ல பழக்கவழக்கங்கள், ஒழுக்கம், நட்பு, மரியாதை, சமூக விழிப்புணர்வு போன்ற நல்ல பழக்கங்களையும் நமக்கு கற்றுக்கொடுக்கிறது.

பக்கம் பக்கமாய் படித்து தாள்தாளாய் எழுதி, ஆண்டிறுதி தேர்வை மொத்தமாய் முடித்து, கோடை விடுமுறையை வீட்டுப்பாடமோ, தேர்வோ இல்லாமல் களித்துக்கொண்டிருக்கின்றனர் பள்ளி குழந்தைகள். வெகு விரைவில் மீண்டும் பள்ளிக்கு போக வேண்டுமே! என்று சிலரும், மீண்டும் பள்ளிக்கு போய் நண்பர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் சிலரும், விடுமுறை காலங்களில் குழந்தைகளை சமாளிக்க முடியாமல் அவர்களை உறவினர் வீட்டுக்கும், விடுமுறை வகுப்புகளுக்கும் அனுப்பியிருக்கும் வேளையில்...

"பள்ளிக்கு செல்லலாம் வாங்க" என்பது ஒரு அழகான அழைப்பு... அது நாம் கல்விக்காக பயணிக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. ஒவ்வொரு காலையும் பள்ளிக்கு செல்லத் தயாராகும்போது ஒரு புதிய நாள், புதிய சவால், புதிய கற்றல் நமக்காகக் காத்திருக்கிறது என்ற உள்ளுணர்வை மாணவர்களுக்குள் விதைக்கும் விதமாக நம் கல்விமுறை இருக்கவேண்டும்.

பள்ளியில் ஆசிரியர்கள் நமக்கு கல்விக் கற்பிக்கிறார்கள். அவர்களே நம் இரண்டாவது பெற்றோர்கள். நண்பர்களுடன் ஒன்றாக விளையாடுவது, ஒன்றாக படிப்பது வகுப்புகளில் ஆர்வமாகக் கலந்துகொள்வது அனைத்தும் பள்ளி வாழ்க்கையை இனிமையாக மாற்றுகிறது.

பள்ளிக்கு செல்லும் குழந்தைகளின் கண்களில் எழும் சந்தோசம், நம்பிக்கை நமது நாட்டின் எதிர்காலத்தின் ஒளிக்கீற்று. கல்வியில்லாமல்

ஒரு சமூகத்தின் வளர்ச்சி சாத்தியமில்லை. ஒருவர் கல்விக் கற்றால் ஒரு தலைமுறையே நிமிர்ந்து நிற்கும். எனவே, ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்குச் சென்று கல்வியைப் பெறவேண்டியது அவசியம்.

பள்ளி என்பது மாணவர்களுக்கு தன்னம்பிக்கையை வளர்த்து, திறமைகளை வளர்த்து, மனஉறுதியை நிலைநாட்ட வேண்டும். அப்படிச் செய்தால் மாணவர்கள் மதிப்பெண் குறைவால், சமூக அழுத்தத்தினால் எடுக்கும் தவறான முடிவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

ஆகையால், ஒவ்வொரு நாளும் புதுமைக் கொண்டு, நண்பர்களுடன் உரையாட, ஆசிரியர்களிடம் அறிவைப் பெற, பல்வகை விளையாட்டுகளில் ஈடுபட, தன்னம்பிக்கையை ஊட்ட, குடும்பத்தில் கல்வி விளக்கேற்றி நம் தலைமுறையை அறிவார்ந்த சமூகமாக்க...

*அனைவரும் "பள்ளிக்கு செல்லலாம் வாங்க..."*

**சிந்தனை :**

1. குழந்தைகளை சிறுவயதில் இருந்து நம்பிக்கை உடையர்களாக வளர்க்க நாம் என்ன செய்யவேண்டும்?
2. சமூக அழுத்தத்தினால் மதிப்பெண் குறைவு என்று தவறான முடிவுகளை தேடிச்செல்லும் மாணவர்களை எவ்வாறுப் பாதுகாக்கலாம்?
3. பள்ளிக்கு போகாமல். வேலைக்குச் செல்லும் குழந்தைகளுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை புரியவைப்பது எப்படி?

இரண்டாவது வாரம்

# நீங்க மட்டும் இல்லைன்னா : பெற்றோர்

**அ. ஜார்ஜ் அன்னாள் விமலா,**
வர்த்தான்விளை.

**சிந்தனைக்கு :**

உயர்கல்வி பயில, உயர்ந்த நிறுவனத்தில் இடம் கிடைக்க உதவிய நபரையோ அல்லது வேறு வழிகளில் உதவுகின்ற மனிதர்களையோப் பார்த்து எண்ணி வியந்தள்ளோம். பல வேளைகளில் ‘‘நீங்கள் இல்லாவிட்டால்...’’ எனவும், இன்னும் பல அடைமொழி வார்த்தைகளை உதிர்த்து அவர்களைப் பெருமைபடுத்தியுள்ளோம். அன்பு பிள்ளைகளே!

நீங்கள் இவ்வுலகில் உருவாக காரணமான பெற்றோர்... விரிவாகப் பார்த்தால், நம்மை கருவில் சுமந்து இவ்வுலகில் ஈன்று, அன்பை ஊட்டி, அமுதை அளித்து அனுதினமும் அரவணைத்து வரும் அன்னையையோ, நமக்கு அறிவூட்டி, உயரத்தின் உச்சத்தை காண்பித்து, ஆற்றல்மிக்கவராய் மிளிர வைத்த தந்தையையோப் பார்த்து நீங்கள் இல்லாவிட்டால் நான் ஏது என்று கூறியுள்ளோமா? இல்லை. காரணம் அது அவர்கள் கடமை, பொறுப்பு என்று எண்ணுவதால்தான். தானாகவே உணவை உட்கொள்ளும் கன்றுகள் நன்றாக வளரவேண்டும் என்பதற்காக தோட்டத்து உரிமையாளர் மரத்தை வெட்டி விடுவது வழக்கம். ஆனால், வளர்த்த, ஊட்டி வளர்த்த பெற்றோரையே, அவரின் உறவையே, அக்கறையையே, அன்பையே, வழிகாட்டுதலையே தனக்கு தாமாக வெட்டிவிடுவது, புறந்தள்ளிவிடுவது என்பது சிலர் வேடிக்கையாகவேக் கொண்டுள்ளனர் என்பதைக் கேட்கும்போது, பார்க்கும்போது மனவேதனைத் தருகிறது.

தந்தையரை மேன்மைப்படுத்துவோர் நீடூளி வாழ்வர் ஆண்டவருக்குப் பணிந்து நடப்போர் தங்கள் அன்னையர்க்கு மதிப்பு அளிப்பர் என்கிறது சீராக் 3: 6.

ஆண்டவரின் அன்பு பெற்றோரின் அன்பிற்குத்தான் ஒப்பிடப்படுகிறது. ‘தாய் தன் பிள்ளையைத் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன்’, ‘தந்தையைப்போல் நான் உங்களைத் தோளில் சுமந்து வந்தேன்’ எனகிற விவிலிய வார்த்தைகள், ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ ‘தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை’ என்கிற ஔவையாரின் மொழிகள் பெற்றோரைப் பெருமைப்படுத்துகின்றன. நம்மை உயர்த்திவிட்ட, விடுகின்ற ஏணிகளைப் பார்த்து செல்லமாய் ஆசையாய் ‘நீங்க மட்டும் இல்லைன்னா!’ என்று ஒருமுறையாவது கொஞ்சுவோமா... அன்பு முத்தம் கொடுப்போமா...

**சிந்தனை வினாக்கள் :**

1. கடவுளின் அன்பு யாருடைய அன்போடு ஒப்பிடப்படுகிறது?
2. நீடூழி வாழ்பவர் யார்?
3. யார் தன் அன்னைக்கு மதிப்பு அளிப்பார்?

மூன்றாவது வாரம்

# நீ என்னை மறந்தால் : இயற்கை

திருமதி. D. **செலின்மேரி**
பட்டரிவிளை

“இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம்” என்பது இயற்கை பற்றிய அழகிய பொன்மொழி. இப்பூமியானது இயற்கையின் கொடைகளால் நிறைந்துள்ளது. நாம் உயிர் வாழ்வதற்கு தேவையான உணவு, நீர் முதல் மனித வாழ்விற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. இயற்கை காற்று, நீர், சூரிய ஒளி, மரம், கரி, மணல் என மக்களுக்கு பயன்படும் இயற்கை வளத்தின் பயன்கள் எண்ணிலடங்காதவை.

**இயற்கையின் சிறப்பு, மற்றும் வளங்களின் முக்கியத்துவம்** :-

நாம் காணும் அனைத்தும் இயற்கையின் படைப்பே. இப்பூமியில் பரந்து விரிந்த நிலப்பரப்பும், பச்சை கம்பளம் விரித்தாற்போன்று காணப்படும் காடுகள், அலைகள், ஓயா கடல்கள், ஓங்கி உயர்ந்த மலைகள், பூத்துக்குலுங்கும் மலர்கள், வெள்ளியை உருக்கி வார்த்தார் போன்ற அருவிகள், வளைந்து நெளிந்து ஓடும் ஆறுகள் போன்றவை மிகவும் சிறப்பு வாய்ந்த வளங்களாகும். மனிதர்கள், விலங்குகள், பறவைகள், புழுப்பூச்சிகள் அனைத்தும் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அனைத்து உயிரனங்களும் நிலைபெற்று வாழ மழை, காற்று, நீர், நிலம், நெருப்பு போன்ற பஞ்சபூதங்களும் தேவை. இயற்கை இல்லாவிட்டால் மனித இனமே அழிந்துவிடும். இத்தகைய சிறப்பு வாய்ந்த இயற்கையைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியமானது.

**இயற்கை மாசடைதலும் இயற்கை சீற்றங்களும்** :

இயற்கையில் உள்ள விலை மதிக்க முடியாத வளங்களான நீர், நிலம், காற்று போன்றவை பல்வேறு காரணங்களால் மாசடைதலையே இயற்கை மாசடைதல் என்கிறோம். இதற்கு தொழில்மயமாக்கல் மற்றும் மனிதர்களின் தீய செயல்களே காரணம். தொழிற்சாலை கழிவுகள், நெகிழி பயன்பாடு, வாகனங்களின் புகை, காடுகளை அழித்தல், மண் வளங்களை சுரண்டுதல், கனிமவளக் கொள்ளை, மலைகளை உடைத்தல் போன்ற செயல்கள் இயற்கை மாசடைவிற்கு முக்கிய காரணிகள் ஆகும். விளைநிலங்களில் வீடுகட்டுதல், தொழிற்சாலை கட்டுவது போன்ற காரணங்களாலும் இயற்கைவளம் பாதிப்படைகிறது.

**இயற்கை சீற்றங்கள் :**

இயற்கை மாசடைவதால் சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு, காட்டுத்தீ போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டு மனிதன் மட்டுமன்றி பறவைகள், விலங்குகள் என உயிர்வாழ் அனைத்துமே பாதிப்பிற்கு உள்ளாகிறது.

**இயற்கையைப் பாதுகாத்தல் :**

இயற்கையைப் பாதுகாப்பது என்பது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உலக இயற்கை தினம் ஜூலை 28-ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

இயற்கையின்றி மனித வாழ்வு இல்லை. இதனால் இயற்கை வளங்களை நமக்கு மட்டுமின்றி வருங்கால தலைமுறையினருக்கும் பயன்படும் வகையில் நிலம், நீர், காற்று மாசுபாட்டை குறைத்து, காடுகளை அழிக்காமல் வீட்டுக்கு ஒரு மரமாவது வளர்த்து இயற்கையை பாதுகாப்போம்... இன்பமாய் வாழ்ந்திடுவோம்.

**சிந்தனைக்கு :**

1. இயற்கை மாசுபடாமல் இருக்க மனிதன் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் என்னென்ன?
2. இயற்கை இல்லாவிட்டால் ஏற்படும் விளைவுகள் யாவை?

**நான்காவது வாரம்**

# பிளீஸ், இது நமக்கு வேண்டாம் : போதை

திருமதி. **புஷ்பலா கிறாஸ் C.**

அன்பிய ஒருங்கிணைய செயலர், கண்டன்விளை.

பரமனின் படைப்பிற்கு ஒரு எதிரான படைப்பு இது. பச்சிளம் குழந்தை முதல் படுக்கை முதியோர் வரை வயது வரம்பின்றி, பாலின வேறுபாடின்றி வாழ்வை அழிக்கும் உற்சாகப் படைப்பு இது. மதுபானம், புகையிலை, அபின், கஞ்சா, பான் மசாலா, போதை ஊசி என போதைபொருள்களின் வகைகள் மாறுபட்டாலும் பாதை தவறிடும் பயணம் இது. போதை, இது நாம் காசு கொடுத்து வாங்கும் வேதனை.

**ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்று**
**சான்றோர் முகத்துக் களி – குறள்**

போதை பொருளை பயன்படுத்தும் பிள்ளையைக் கண்டு தாயின் மனமும், முகமும் வாடும் என்னும் வள்ளுவரின் குறளினைச் சிந்திப்போம். போதை வீட்டிற்கும், நாட்டிற்கும் இன்றி உலகின் சாபக்கேடு என்பதனை நாம் உணர்வோம். சொர்க்கமாய் தெரியும் போதை மனித வாழ்வையே நரகமாக்கி விடும் ஒன்று. கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என முக்கால வளர்ச்சிக்கான முட்டுக்கட்டை போதை.

சுய விருப்பத்தின் பேரிலும், தற்காலிக மகிழ்ச்சி, பொழுதுபோக்கு, நட்பு வட்டார அழுத்தம், வசிப்பிட சூழல், திரை பிரபலங்கள், குடும்ப உறுப்பினர்கள் பயன்பாட்டைப் பார்த்து போதைக்குள் மூழ்கும் வழிகள் மாறுபட்டாலும் அதன் முடிவு ஒன்றே. அது “**அழிவின் பாதை**”. அதன் பாதிப்போ ஏராளம். அவைகளாவன: ஆற்றல் இழத்தல், உடல் உள்ளநோய்கள் தாக்கம், சுய பொறுப்புகளை புறக்கணித்து குற்றச்செயலில் ஈடுபடுதல், தற்கொலை, மஞ்சள் காமாலை, வலிப்பு, இதயநோய், புற்றுநோய், பால்வினை நோய்களுக்கு வழிவகுத்தல், விபத்து போன்ற பேரழிவிற்கு காரணமாகிவிடுதல் என இன்னும் பல காரணங்கள்.

போதையை தடுக்க சர்வதேச அரசு ஜீன் 26-ம் நாளை போதை ஒழிப்பு தினமாக கடைபிடித்து வருகின்றது. நாம் போதைக்கு எதிராக நற்சமூகம் உருவாக்க ஒன்றிணைவோம். போதை நோயால் பாதிக்கப்பட்டோர் மீட்படைய மறுவாழ்வு மையம், ஆற்றுபடுத்துதல் போன்றவற்றால் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவோம். தன்னம்பிக்கை ஒன்றே போதையை ஒழிக்கும் சிறந்த ஆயுதம். யோகா, தியானம், தகுந்த ஓய்வு, ஆரோக்கியமான உணவு, நற்செயல்களில் ஈடுபடுத்திக் கொள்வதன் வழியாக போதையில்லா புதுயுகம் படைக்க முற்படுவோம். சிந்திக்க!.

**இனிவரும் காலங்களில்,**

1. போதை இல்லா சமுதாயத்தை உருவாக்க நாம் அன்பியம், பங்கு, சமூகம் - ரீதியாக மேற்கொள்ளும் முயற்சிகள் என்னென்ன?
2. போதையில் நாம் சிக்குண்டோரை மீட்க இதுவரை மேற்கொண்ட, இனி மேற்கொள்ளப்போகும் வழிமுறைகள் என்னென்ன?

# நலத்திட்டங்கள்

## புத்தன்கடை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| நாகக்கோடு | ஒருங்கிணையம் சார்பாக | புற்றுநோயாளி | 1 | 25,000/- |
| மாஞ்சக்கோணம் | ஒருங்கிணையம் சார்பாக | ஏழைகள் நல உதவி | 1 | 3,000/- |
| குலசேகரம் | புனித அந்தோணியார் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 3,500/- |
| | | கல்வி உதவி | 1 | 3,000/- |
| | புனித அன்னை தெராசாள் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 5,300/- |
| போங்கின்காலை | புனித சலேசியார் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 500/- |
| ஈஞ்சக்கோடு | புனித லூர்து அன்னை அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 1,000/- |
| | புனித குழந்தை தெரசாள் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,000/- |
| | புனித செபமாலை அன்னை அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 2,000/- |
| | புனித ஜார்ஜியார் அன்பியம் | மருத்துவ நல உதவி | 1 | 5,000/- |
| பாரதப்பள்ளி | ஒருங்கிணையம் சார்பாக | **Matrix** நிறைவாழ்வு இல்லம் | 1 | 9,500/- |

## காரங்காடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| தக்கலை | புனித எலியாசியார் அன்பியம் | மருத்தவ உதவி | 1 | 5,000/- |
| கோழிப்போர்விளை | அன்னை தெராசா அன்பியம் | மனவளர்சி குன்றியவர் உதவி | 1 | 5,000/- |
| | | புற்றுநோயாளி | 1 | 13,840/- |
| | | மனவளர்சி குன்றியவர் உதவி | 1 | 9,230/- |
| | | ஏழை விதவை கைம்பெண் | 10 | 5,180/- |

| | | | | |
|---|---|---|---|---|
| கோழிப்போர்விளை | அன்னை தெராசா அன்பியம் | பெற்றோரால் கைவிடப்பட்ட கைக்குழந்தை | 1 | 15,000/- |
| குமாரபுரம் | அன்னை தெராசா அன்பியம் | மருத்துவ உதவி | 2 | 3,000/- |
| | ஆரோக்கிய அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,500/- |
| | பூண்டி அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 9,100/- |

## திரித்துவபுரம் மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| மருதங்கோடு | புனித தோமா அன்பியம் | ஏழைகள் உதவி | 2 | 4,000/- |
| | புனித லூர்து அன்னை அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 4,100/- |
| | புனித பவுல் அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 5,500- |
| | புனித யோசேப்பு அன்பியம் | ஏழைகள் உதவி | 1 | 1,000- |
| | புனித சவேரியார் அன்பியம் | ஏழைகள் உதவி | 3 | 2,500/- |
| நல்லூர் | புனித சவேரியார் அன்பியம் | சகாயநகர் முதியோர் இல்லம் | 1 | 12,000/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,200/- |
| | புனித சவேரியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,500/- |
| | புனித செபஸ்தியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 4,200/- |
| | புனித சூசையப்பர் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 3,500- |
| | புனித கார்மேல் மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| | புனித ஆரோக்கிய மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 4,175/- |

## மாத்திரவிளை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| | புனித வளனார் அன்பியம் | குட் நியூஸ் முதியோர் இல்லம், நாங்குநேரி | 1 | 14,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| மாத்திரவிளை | புனித அந்தோணியார் அன்பியம் (மேற்கு மாத்திரவிளை II) | முதியோர் இல்லம், சகாய நகர் | 1 | 5,600/- |
| | புனித ஞானபிரகாசியார் அன்பியம், வடலிவிளை | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் (மேற்கு மலையன்விளை I) | ஏழைகள் நல உதவி | 1 | 2,500/- |
| | புனித தேவமாதா அன்பியம், (தெற்கு தாறாவிளை) | மருத்துவ உதவி | 1 | 3,000/- |
| | புனித விண்ணரசி அன்பியம், (கோட்டவிளை I) | ஏழைகள் நல உதவி | 1 | 1,000/- |
| | புனித பெரிய நாயகி அன்பியம், (கோட்விளை II) | மருத்துவ நல உதவி | 1 | 2,000/- |
| | புனித தேவசகாயம், (கண்ணாடிவிளை) | மருத்துவ நல உதவி | 1 | 2,000/- |
| | புனித தோமையார், (மூவர் புரம்) | முதியோர் இல்லம், சகாய நகர் | 1 | 3,000/- |
| பெருமாங்குழி | 3-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 10,000/- |
| | 1-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 2,500/- |
| | 5-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1,500/- |

## புதிய நிர்வாகிகள்

### முளகுமூடு மறைவட்டம்

**சுவாமியார்மடம் :**

தலைவர் : திருமதி. ஸ்டெல்லா
செயலர் : திருமதி. ஆன்சிலின் மேரி
து.செயலர் : திருமதி. ஹெலன் மேரி
பொருளர் : திரு. சுஜின்

**வாழ்வச்ச கோஷ்டம் :**

தலைவர் : திரு. சுந்தர் ராஜ்
து.தலைவர் : திரு. செல்வராஜ்
செயலர் : திருமதி. அனிதா
து.செயலர் : திருமதி. இராஜஸ்வரி
பொருளர் : திருமதி. விஜயா

## முளகுமூடு மறைவட்டம்

**பள்ளியாடி :**

தலைவர் : திரு. வினோ
து.தலைவர் : திரு. சைலஸ்
செயலர் : திருமதி. மேரி கலா
து.செயலர் : திருமதி. பிரவீணா ரமேஸ்
பொருளர் : திரு. ஜஸ்டின் ஜுடு

**குமாரபுரம் :**

தலைவர் : திருமதி. ஷாலினி
து.தலைவர் : திருமதி. கீதா
செயலர் : திருமதி. வைலா ராணி
து.செயலர் : திருமதி. ஆக்னஸ்
பொருளர் : திரு. ஜெபஜோஸ்

**இருதயபுரம் :**

தலைவர் : திரு. K. ஷிபு
து.தலைவர் : திரு. S. ஜோசப்
செயலர் : திருமதி. நிஷா
து.செயலர் : திரு. N. வின்சென்ட்
பொருளர் : திருமதி. சுதா

**முளவிளை :**

தலைவர் : திரு. லூக்காஸ்
து.தலைவர் : திரு. அகஸ்டின்
செயலர் : திருமதி. சுனிதா
து.செயலர் : திருமதி. மேரி ஷீபா
பொருளர் : திரு. அனீஸ் மேத்யூ

## திரித்துவபுரம் மறைவட்டம்

**கல்லுப்பாலம் :**

தலைவர் : செல்வன். S. ஆன்றோ ஜெபின்
து.தலைவர் : திரு. J. சதீஸ் குமார்
செயலர் : திருமதி. R. ஆன்றோ ஜினி
து.செயலர் : திருமதி. T. மீகா
பொருளர் : திரு. S. விஜய மேரி

**மண்ணான்விளை :**

தலைவர் : திரு. தேவநேசன்
து.தலைவர் : திரு. புஷ்ப றோசன்
செயலர் : செல்வி. ஆதர்ஷா
து.செயலர் : திருமதி. ஜாயிஸ் விஜயா
பொருளர் : திரு. செல்வராஜ்

# ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 01.06.2025 | தி.ப. 1: 1 – 11, | எபி. 9: 24 - 28 | லூக். 24: 46 - 53 |
| 2 | 8.06.2025 | தி.ப. 2: 1 – 11, | உரோ. 8: 8 - 17 | யோவா. 14: 15 - 16; 23 - 26 |
| 3 | 15.06.2025 | நீ.மொ. 8: 22 - 31 | உரோ. 5: 1 - 5 | யோவா. 16: 12 - 15 |
| 4 | 22.06.2025 | தொ. நூ. 14: 18 -20 | 1 கொரி 11: 23 - 26 | லூக். 9: 11b - 17 |
| 5 | 29.06.2025 | தி.ப. 12: 1 - 11 | 2 திமொ. 4: 6-8; 17-18 | மத். 16: 13 - 19 |

அடித்தளம் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்புக்கு.... 9487110298, 8870513177

அன்பிய இயக்குநர்
அன்பிய பணிக்குழு, ஆயர் இல்ல வளாகம்,
உண்ணாமலைக்கடை - 629 179

# குழித்துறை மறைமாவட்டம்

## அன்பிய பணிக்குழு
## ஜூபிலி ஆண்டை முன்னிட்டு

# நடத்தும் கலைவிழா

**தலைமை மேதகு ஆயர் ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்கள்**

**நாள் சனிக்கிழமை**

**நேரம் பிற்பகல் 01.30 மணி முதல் 05.30 மணி வரை**

**இடம் : தூய மரியன்னை பசிலிக்கா, முளகுமூடு**

**பங்கேற்போர் : பங்கு அன்பிய ஒருங்கிணைய நிர்வாகிகள்**




# NANJIL

## CATHOLIC COLLEGE OF ARTS & SCIENCE

Kaliyakkavilai, K.K. Dist - 629153.

Approved by the Government of Tamil Nadu
Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli
Approved by UGC under Sections 2(f) & 12(B)
Re - Accredited by **NAAC** with 'A' Grade

Email : nanjilccas@gmail.com, Website : www.nccas.edu.in



Diocese of Kuzhithurai

## Courses Offered

- B.A - English ( 2 Batches )
- B.Sc - Mathematics
- B.Sc - Physics
- B.Sc - Chemistry
- B.Sc - Computer Science
- B.C.A
- B.Sc - Physical Education
- B.Sc - Zoology
- B.Com ( 2 Batches )
- B.B.A

**Special Scholarships**
- Meritorious
- Sports
- Destitute

- M.A - Tamil
- M.A - English
- M.Sc - Mathematics
- M.Sc - Physics
- M.Sc - Chemistry
- M.Sc - Computer Science
- M.Com
- M.S.W
- *M.Sc - Psychology

(*Subject to Affiliation)

**Research Centres Affiliated to MSU**

- Ph.D - Tamil
- Ph.D - Physics
- Ph.D - Chemistry
- Ph.D - Commerce

**M.B.A.** ( Twinning Programmes )
Pondicherry Central University - D.D.E.

**Specialization**

- MBA Marketing
- MBA Finance
- MBA International Business
- MBA Human Resource Management
- MBA General
- MBA Tourism
- MBA Hospital Management
- MBA Operation & Supply Chain Management

**Diploma Courses**

**Study & Exam Centres**

DDCE M.S University
DDCE Pondicherry University
IGNOU : 9489461850,9042831240

## Contact

**Ph : 04651 244788, 244790, 8903013368, 9940347178**

Online Admission Link : nccas.bonifon.in/register (or) Login to our Website : www.nccas.edu.in

**Secretary / Correspondent**
Rev. Dr. C. Steephen, M.Sc., Ph.D.

**Bursar**
Rev. Fr. V. Vinso Antony.

**Principal**
Dr. M. Amalanathan M.Sc., M.Phil., Ph.D.